**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | : | **P W :8** |
| **Name** | : | சுதா |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.07.2026.**

எதிரிகள் 2, 3 ஆஜர். எதிரி 1 இறப்பு.

முதல் விசாரணை: தற்சமயம் நான் சுப்பிரமணியபுரம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றி வருகிறேன். 15.07.2021ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றிய போது மேற்படி காவல்நிலைய குற்ற எண்.383/2021 வழக்கில் இறந்து போன தேன்மொழி என்ற மகாலட்சுமியின் இறப்பு குறித்து பிரேத பரிசோதனை நடத்த மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் கடிதம் பெற்று மதுரை அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியரிடம் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து மேற்படி நபரது பிரேதத்தை பிரேத பரிசோதனை நடத்திய மருத்துவருக்கு அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு மேற்படி பிரேதத்தை அவரது தாயாரிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். இந்த வழக்கு

சம்பந்தமாக உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் பிரேத பரிசோதனை கடிதம் எதையும் மருத்துவரிடம் கொடுக்கவில்லை, இறந்தவரின் உடலை மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்கு அடையாளம் காட்டவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | **:** | **P W :9** |
| **Name** | **:** | ரமேஷ் |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.07.2026.**

எதிரிகள் 2, 3 ஆஜர். எதிரி 1 இறப்பு.

முதல் விசாரணை: தற்சமயம் சி−2 சுப்பிரமணியபுரம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றி வருகிறேன். 15.07.2021ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றிய போது மேற்படி காவல்நிலைய குற்ற எண்.383/2021 வழக்கில் இந்த வழக்கு சம்பந்தமாக 2 மொபைல் போன்கள் தொடர்பான Call Detail ரிக்கார்டு, செல் ஐ.டி., Address Customer Application Form, 65(b) சான்றிதழ் கோரி 23.11.2021ம் தேதி Vodophone நிறுவனத்திற்கு அனுப்பிய கடிதத்திற்கு Vodophone நிறுவனத்தில் இருந்து 08.7.2022 தேதிய கடிதத்தை வோடபோன் நிறுவன மேலாளர் கார்த்திக் என்பவரிடமிருந்து பெற்று உதவி ஆணையரிடம் கொடுத்தேன். என்னிடம் தபாலை ஒட்டி கொடுத்தார்கள்.

அதை உதவி ஆணையரிடம் கொடுத்தேன். அவர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

செல்போனை யார் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. தபாலை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் தபால் எதையும் வோடபோன் நிறுவன மேலாளரிடமிருந்து பெற்று வரவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. உதவி ஆணையரிடம் தபாலை கொடுத்ததாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை